**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

நான் கூறிய வார்த்தைகள், வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன.

(யோவான்: 6:63)

**இன்றைய வாசகங்கள்:**

நெகேமியா: 8: 2-6, 8-10;

திபா: 19: 8-10, 15;

1 கொரி: 12: 12-30 (அ) 12-14,27;

லூக்கா: 1:1-4, 4:14-21.

நம்மில் எத்தனைபேர் அதை எதிரொலிக்கமுடியும்? ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக, இந்தத் தொற்றுநோய்க் காலத்தில், நம்முடைய திருஅவையின் தலைமைத்துவம், பொதுதிருப்பலிகளை இடைநிறுத்துவதாக மிகுந்த வேதனையோடு, ஒரு கடினமான முடிவை எடுத்தது. சற்றும் கற்பனை செய்துபார்க்கமுடியாத அளவுக்கு, இறைவார்த்தையை எடுத்துரைப்பதையும் நற்கருணையைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு கடுமையான வெற்றிடத்தையும் நாம் அனுபவித்தோம். இவற்றையெல்லாம் நாம் சலுகைகளாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

கடவுளின் வார்த்தையை நாம் மதிக்கவேண்டும். நாசரேத்தூரின் செபக்கூடத்தில் யூதர்கள் மத்தியில் பேசிய அந்த இயேசுவே பேசுகின்றார். புனித அகுஸ்தினார் இவ்வாறு கூறுகிறார்: “ஆண்டவரைக் கண்டுணர்ந்து அவரது வார்த்தையில் இளைப்பாறும்வரை நம் உள்ளம் அமைதியடையாது” திருப்பாடல் ஆசிரியர் கூறுவதுபோல, ஆண்டவரே, உம் வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன” என்று பதிலுரைக்கின்றோம்.

அவ்வாறென்றால், இறைவார்த்தை நமக்குக் கூறுவது என்ன? கடந்த சில வாரங்களின் வாசகங்கள், கிறிஸ்துவின் உடலை உருவகமாகப் பேசுகின்றன. கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் பவுல் கூறுகின்றார்: “உறுப்புகள் பலவாயினும், உடல் ஒன்றாய் இருப்பதுபோல், கிறிஸ்துவும் இருக்கிறார்” உடலின் உறுப்புகளில் ஒன்று பழுதடைந்திருந்தால், உடலின் மற்ற உறுப்புகள் அதை வலுப்படுத்தவேண்டும். நம் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன. தனிநபராக நமக்குக் கொடுக்கப்பட்ட கொடைகளை விவேகத்துடன் முழு சுதந்திரத்தோடுப் பயன்படுத்துவதால், கிறிஸ்துவின் ஒன்றித்த ஆன்மீக உடலை மேன்மைப்படுத்துகின்றோம்.

புனித லூக்கா தாம் எழுதிய நற்செய்தியின் தொடக்கத்தில் ஏன் இவ்வாறு எழுதவேண்டும்? ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் உயிருள்ள வார்த்தையை, நாம் இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ளவதற்காக எழுதுகிறார். அவர் வாழ்ந்த காலத்துக்குரிய மக்களுக்காக மட்டுமல்ல; இன்று நமக்காகவும் இதை அழகாக கட்டமைக்கின்றார். “நமக்கு இறைவார்த்தை - உயிருள்ளது, ஆற்றலுள்ளது, ஆவியை வாழ்ந்துகாட்டுவது” இறைவார்த்தைக்கு நாம் மதிப்பளிக்கும்போது, காணாமல் போனதைக் கண்டுபிடிக்கவும், ஆவியில் உடைந்துபோனதைக் குணப்படுத்தவும், பசியுற்றோருக்கு உணவளிக்கவும், கட்டுண்டு இருப்போரை விடுவிக்கவும், நாடுகளை மீண்டும் கட்டியெழுப்பவும், மக்களுக்கு அமைதி கொணரவும், மேலும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வழியிலும், நாம் செய்யும் செயல்களிலும் , சொல்லும் சொற்களிலும் கிறிஸ்துவின் ஒளியைப் பரப்பவும் முடியும். (ஹோர்ட் துர்மன் - தழுவல்)

INTERNAL CIRCULATION ONLY
BUL 04/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

23 ஜனவரி 2021

Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 3 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவ ஒற்றுமைக்காக இறைவேண்டல் வாரம்**

# இறைவார்த்தையை மதித்தல்

நாடுகடத்தப்பட்டு மீண்டும் நாட்டுக்குத் திரும்பிய ஆடவர், பெண்டிர், புரிந்துகொள்ளும் ஆற்றலுள்ள சிறுவர் ஆகியோர் இறைவார்த்தைக்கு செவிமடுத்தனர் என்று இன்றைய முதல் வாசகத்தில்(நெகேமியா 8) வாசிக்கின்றோம். எஸ்ரா, மக்களுக்கு இறைவார்த்தையை அறிவித்தபோது, அவர்கள் பணிந்து முகங்குப்புற விழுந்து வணங்கினார்கள். ஆளுநர் நெகேமியாவும், குருவும் திருநூல் வல்லுநருமான எஸ்ராவும் லேவியர்களும் விளக்கம் கூறியதைக் கேட்டு மக்கள் அழுதனர்.

